**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: திரு.எஸ்.பிரகதீஸ்வரன், எம்.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்.1, குளித்தலை**

**2024 ம் ஆண்டு ஜீலை மாதம் 24-ம் தேதி புதன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.262/2023**

C.N.R.No.TNKR0A-002123-2023

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண் (Name of the Police Station and Crime number of the offence) | அரசுக்காக, காவல் ஆய்வாளர், பாலவிடுதி காவல் நிலையம், (குற்ற எண்.81/2021) |
| 2. | எதிரிகளின் பெயர் (Name) | 1) கார்த்திக், (29/2024) த/பெ. கருப்பையா, 2) முருகேசன், (26/2024) த/பெ.கருப்பையா. மேற்படி இருவரின் முகவரி: சாந்துவார்பட்டி, பாலவிடுதி கிராமம், கடவூர் வட்டம், கரூர் மாவட்டம். |
| 3. | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 6. | எதிரிகளின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurence) | 22.04.2021 |
| 8. | புகார் தேதி (Complaint) | 23.04.2021 |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் (Apprehension) | 23.04.2021 |
| 10. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | 01.05.2021 |
| 11. | Commitment | இல்லை |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 10.07.2024 |

| | | |
|---|---|---|
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி<br>(Closure of Trial) | 18.07.2024 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு<br>(Sentence or Order) | 24.07.2024 |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு<br>(Service of copy of Judgment or finding on Accused) | ------ |
| 16. | காலதாமதத்திற்கான காரணம்<br>(Explanation of Delay) | ------ |

இவ்வழக்கு 10.08.2023 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று குற்ற முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.P.சரவணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும்.

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு -**

கடந்த 22.04.2021ம் தேதி இரவு 09.00 மணியளவில் இவ்வழக்கின் சம்பவ இடமான சாந்துவார்பட்டியில் உள்ள எதிரியின் வீட்டின் அருகில் வைத்து இவ்வழக்கின் எதிரிகள் 1)கார்த்திக் மற்றும் 2.முருகேசன் இருவரும் புகார்தாரரின் அண்ணன் பாண்டியன் என்பவரை பிடித்து இரண்டு கைகளையும், இரண்டு

கால்களையும் கயிற்றால் கட்டி 1ம் எதிரி இரும்பு கம்பியை எடுத்து பாண்டியன் தலையில் பின்பக்கம் அடித்து இரத்தகாயத்தை ஏற்படுத்தியும், 2 ம் எதிரி அருகில் கிடந்த குச்சியை எடுத்து பண்டியனின் தலையில் நெற்றியில் இடது புறத்தில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் இருவரும் ஆயுதத்தை காட்டி கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்துள்ளார்கள். எனவே, எதிரிகளின் செய்கையானது இ.த.ச.பிரிவுகள் 294(b), 342, 324, 506(2-ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக பாலவிடுதி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் எதிரிகளின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகளுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. ஆலோசனை செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர், எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவியபோது, அவர்கள் குற்றத்தினை மறுத்துள்ளார்கள். இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 342, 324, 506(2)-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அதனை விளக்கி வினவியபோது, அவர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்துரைத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

**<u>3. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு</u>** -

3.1 அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

3.2 இவ்வழக்கின் இறுதி அறிக்கை தாக்கல் செய்த விசாரணை அதிகாரி திரு.மோகன் அவர்களுக்காக கூடுதல் சாட்சியம் அளித்த காவல் உதவி ஆய்வாளர் அ.சா.9 திரு.மனோகரன், கடந்த 23.04.2021ம் தேதி திரு.மோகன் அவர்கள் பாலவிடுதி காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது, கரூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி அங்கு சிகிச்சையில் இருந்த கார்த்திக் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பாலவிடுதி காவல் நிலைய குற்ற எண்.81/2021, இ.த.ச பிரிவுகள் 147, 148, 342, 294(b), 324, 506(2)-ன் கீழ் வழக்கு பதிவு செய்து, சம்பவ இடம் சென்று சாட்சிகள் தினேஷ்குமார் மற்றும் ராஜா ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரி கார்த்திக் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், பின்னர் எதிரி கார்த்திக் ஆஜர் செய்த வழக்கு சொத்துக்களை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி, பவடிம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், பின்னர் எதிரிகள் இருவரையும் காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், இவ்வழக்கின் மற்ற எதிரிகளான வீராசாமி, சின்னதுரை, ராகவன், தனபாக்கியம், செல்வி ஆகியோர் குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என

தெரியவந்ததால், மேற்படி நபர்களை இவ்வழக்கில் இருந்து நீக்கி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இ.த.ச பிரிவுகள் 147, 148, 342, 294(b), 324, 506(2)லிருந்து, இ.த.ச பிரிவுகள் 342, 294(b), 324, 506(2) ஆக மாற்றம் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கில் காயமடைந்த நபர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் சுரேஷ் அவர்களை விசாரித்து, காயச்சான்றிதழ் மற்றும் விபத்து பதிவேட்டு அறிக்கைகளை பெற்றுள்ளார் என்றும், இறுதியாக புலன்விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்களும், நான்கு சான்றுபொருட்களும் குறியீடு செய்யப்பட்டது.

4. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிரான சங்கதிகளை எதிரிகளிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது, எதிரிகள் பொய் சாட்சியம் என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவியபோது, எதிரிகள் சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே, எதிரிகள் தரப்பு முடிக்கப்பட்டது.

**5. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்** -

அரசு தரப்பு வழக்கறிஞர், இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறியிருந்தாலும், விசாரணை அதிகாரி அ.சா.9 அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

**6. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்** -

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர் என்றும், எனவே மேற்படி சாட்சிகள் நம்பகமற்ற சாட்சிகள் என்றும், மேற்படி நபர்களின் சாட்சியங்கள் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், விசாரணை அதிகாரியின் சாட்சியம் மட்டும் அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய போதாது என்றும், எனவே அரசு தரப்பால் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று வாதிட்டார்.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இருதரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

| |
|---|
| எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 342, 324, 506(2)-ன் கீழான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும். |

**<u>8. தீர்வு</u> -**

8.1 கடந்த 22.04.2021ம் தேதி இரவு 09.00 மணியளவில் எதிரியின் வீட்டின் அருகில் வைத்து இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் சேர்ந்து புகார்தாரரின் அண்ணன் பாண்டியன் என்பவரை பிடித்து இரண்டு கைகளையும், இரண்டு கால்களையும் கயிற்றால் கட்டி 1ம் எதிரி இரும்பு கம்பியை எடுத்து பாண்டியன் தலையில் பின்பக்கம் அடித்ததாகவும், 2ம் எதிரி அருகில் கிடந்த குச்சியை எடுத்து பண்டியனின் தலையில் நெற்றியில் அடித்ததாகவும், எதிரிகள் இருவரும் ஆயுதத்தை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாகவும், எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 342, 324, 506(2-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8.2 சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.8 பாண்டியன் தனது சாட்சியத்தில், அ.சா.1 கார்த்திக் தனது தம்பி என்றும், ஆஜர் எதிரிகள் தனது உறவினர்கள் என்றும், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 09.00 மணியளவில் தான் சாலையில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, தன்னை இரும்பு கம்பியால் தாக்கினார்கள் என்றும், இரவு நேரம் என்பதால் தன்னை தாக்கியவர்களை தான் பார்க்கவில்லை என்றும், தனக்கு தலையில் அடிபட்டதால் மயங்கிவிட்டதாகவும், அதனால் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை பற்றி தனக்கு சரியாக தெரியவில்லை என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

8.3 சம்பவம் குறித்து, புகார் வாக்குமூலம் அளித்த சாட்சியான அ.சா.1 கார்த்திக் தனது நீதிமன்ற சாட்சியத்தில், ஆஜர் எதிரிகள் தனது உறவினர்கள் என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள தனது கையொப்பத்தை மட்டும் அடையாளம் காட்டி, மேற்படி கையொப்பத்தை போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க செய்து கொடுத்தேன் என்றும், அதில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

8.4 சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக குற்ற இறுதியறிக்கையில் காட்டப்பட்டுள்ள அ.சா.2 ராணி தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகள் தனது உறவினர்கள் என்றும், அ.சா.1 தனது அண்ணன் மகன் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

8.5 கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.3 ராஜா மற்றும் அ.சா.4 நல்லுசாமி ஆகியோர் தங்களது சாட்சியத்தில், கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முறையே 2 மற்றும் முதலாவது கையெழுத்துக்கள் தங்களுடையது என்றும், மேற்படி கையெழுத்தை போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்ததாகவும், இவ்வழக்கு பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

8.6 சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகளாக குற்ற இறுதியறிக்கையில் காட்டப்பட்டுள்ள அ.சா.5 சக்திவேல், அ.சா.6 முத்துஜெயபால் மற்றும் அ.சா.7 காமாட்சி வைரமூர்த்தி ஆகியோர் தங்களது சாட்சியத்தில், அ.சா.1 கார்த்திக் மற்றும் ஆஜர் எதிரிகள் தங்களது உறவினர்கள் என்றும், இவ்வழக்கு பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

8.7 மேற்கண்ட சாட்சிகளின் சாட்சியங்களை ஒருசேர பரிசீலிக்கையில், அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், அவர்களை பிறழ் சாட்சிகளாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பால் எவ்வித சங்கதிகளும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யும் வகையில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால், மேற்படி நபர்களின் சாட்சியங்கள் உறுதியூட்டப்படாமல் முழுமையாக ஏற்கக்கூடியதல்ல **(Neither Wholly Reliable nor Wholly Unreliable)** என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளால், அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8.7 இந்நிலையில், வழக்கில் எஞ்சியுள்ள சாட்சியமான விசாரணை அதிகாரி அ.சா.9 திரு.மனோகரன், காவல் உதவி ஆய்வாளரின் சாட்சியம் மட்டுமே உள்ளது. மேலும், அ.சா.9 ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில், அவரது சாட்சியமும் அவர் மூலமாக

குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களும், இறுதியறிக்கையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பினும், அ.சா.9 ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில், அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில் இறுதியறிக்கையில் சொல்லப்பட்டுள்ள அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேலும், புலன் விசாரணை அதிகாரி அ.சா.9 ன் சாட்சியம், புலன் விசாரணை குறித்து ஆவண சாட்சியங்களின் அடிப்படையில் விளக்குவதாக அமைந்துள்ளது. அ.சா.9 இவ்வழக்கு சம்பவத்தினை நேரில் கண்ட கண்ணுற்ற சாட்சியல்ல. எனவே, எதிரிகளுக்கு எதிரான புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாக வைத்து இவ்வழக்கினை தீர்மானித்திட முடியாது என்று இந்நீதிமன்றம் உறுதியாக கருதுகிறது. எனவே, அ.சா.5 ன் சாட்சியம் மட்டுமே அரசு தரப்பு வழக்கை நிரூபிப்பதற்கு போதுமானதாகாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9. எனவே, எதிரிகளின் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10. முடிவாக, எதிரிகள் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து, எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 294(b), 342, 324, 506(2)ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, மேற்படி எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

11. குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் பிணையில் செல்லும்போது ஏற்படுத்திய பிணை ஆவணம் இத்தீர்ப்பிற்கு பிறகு 2 மாதங்கள் கழித்து இரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

12. இவ்வழக்கின் எதிரிகள் 23.04.2021 அன்று கைது செய்யப்பட்டு, 01.05.2021 ம் தேதியன்று இந்நீதிமன்ற உத்தரவின்படி பிணையில் சென்றுள்ளார்கள்.

13. இந்த வழக்கில் போலிசாரால் கைப்பற்றப்பட்டு R.P.No.40/2021 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.பொ.1 ஆன சுமார் 153 செ.மீ நீளம் கொண்ட நைலான் சிவப்பு நிற கயிறு ஒன்று, அ.சா.பொ.2 ஆன சுமார் 142 செ.மீ நீளம் கொண்ட நைலான் சிவப்பு நிற கயிறு ஒன்று, அ.சா.பொ.3 ஆன சுமார் 86 செ.மீ நீளமும், சுமார் 1 செ.மீ அகலமும் கொண்ட இரும்பு முறுக்கு கம்பி ஒன்று, அ.சா.பொ.4 ஆன சுமார் 4 செ.மீ விட்டமும், 95 செ.மீ நீளமும் கொண்ட இரத்த கறை படிந்த குச்சி ஒன்று ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2024 ம் வருடம் ஜீலை திங்கள் 24-ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

ஒம்/-எஸ்.பிரகதீஸ்வரன்,

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**குளித்தலை.**

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. கார்த்திக் |
| அ.சா.2 | திருமதி.ராணி |
| அ.சா.3 | திரு. ராஜா |
| அ.சா.4 | திரு. நல்லுசாமி |
| அ.சா.5 | திரு. சக்திவேல் |
| அ.சா.9 | திரு.முத்துஜெயபால் |
| அ.சா.7 | திரு.காமாட்சி வைரமுத்து |
| அ.சா.8 | பாண்டியன் |
| அ.சா.9 | மனோகரன் (காவல் உதவி ஆய்வாளர்) |

## Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் | 10.07.2024 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2. | பார்வை மகசரில் உள்ள அ.சா.3 ன் கையெழுத்து | 10.07.2024 | அ.சா.ஆ.2 | அசா.3 | அசல் |
| 3. | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.3 ன் 2 வது கையெழுத்து | 10.07.2024 | அ.சா.ஆ.3 | அ.சா.3 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3 ன் 2 வது கையெழுத்து | 10.07.2024 | அ.சா.ஆ.4 | அ.சா.3 | அசல் |
| 5. | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.4 ன் முதல் கையெழுத்து | 10.07.2024 | அ.சா.ஆ.5 | அ.சா.4 | அசல் |
| 6. | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் முதல் கையெழுத்து | 15.07.2024 | அ.சா.ஆ.6 | அ.சா.4 | அசல் |
| 7. | புகார் | 15.07.2024 | அ.சா.ஆ.7 | அ.சா.9 | அசல் |
| 8. | முதல் தகவல் அறிக்கை | 15.07.2024 | அ.சா.ஆ.8 | அ.சா.5 | அசல் |
| 9. | பார்வை மகசர் | 15.07.2024 | அ.சா.ஆ.9 | அ.சா.5 | அசல் |
| 10. | கைப்பற்றுதல் மகசர் | 15.07.2024 | அ.சா.ஆ.10 | அ.சா.5 | அசல் |
| 11. | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி | 15.07.2024 | அ.சா.ஆ.11 | அ.சா.5 | அசல் |
| 12. | படிவம் 91 | 15.07.2024 | அ.சா.ஆ.12 | அ.சா.5 | அசல் |
| 13. | மாதிரி வரைபடம் | 15.07.2024 | அ.சா.ஆ.13 | அ.சா.5 | அசல் |
| 14. | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் | 15.07.2024 | அ.சா.ஆ.14 | அ.சா.5 | அசல் |
| 15. | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | 15.07.2024 | அ.சா.ஆ.15 | அ.சா.5 | அசல் |
| 16 | எதிரி நீக்கல் அறிக்கை | 15.07.2024 | அ.சா.ஆ.16 | அ.சா.5 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்** - இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள்** - இல்லை

நகல்- தலைமை நீதித்துறை நடுவர் கரூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இந்த தீர்ப்புரையின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இந்த வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கில் நான்கு சான்றுபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஒம்/-எஸ்.பிரகதீஸ்வரன்,

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**குளித்தலை.**

**Judicial Form No.61**
**(See Rule 106)**
**ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE No.I, KULITHALAI**
**JUDGMENT IN CC 262 OF 2023**

Complainant : Inspector of Police, Palavidhuthi PS.

Accused **:** 1.Karthick, S/o.Karupaiya , 2.Murugeswan S/o.Karupaiya.

Offence **:** U/s. 294(b), 342, 324, 506(2) of IPC.

Finding **:** A1 and A2 found not guilty U/s. 294(b), 342, 324, 506(2) of IPC.

Sentence **:**A1 and A2 Present. Judgment pronounced in the open court. In the result, A1 and A2 found not guilty U/s. 294(b), 342, 324, 506(2) of IPC. Hence, A1 and A2 are acquitted from the said charges U/s.248(1) of Crpc.

Property : M.O.1 to M.O.4 are ordered to be destroyed after expiry of appeal period.

| SI. No | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father's name | Caste or race | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | Karthick | Karupaiya | Hindu | Labourer | Santhuvarpatty, Palaviduthi Village, Kadavur Taluk, Karur District. | 29/2024 |
| 2. | Murugesan | Karupaiya | Hindu | Labourer | Santhuvarpatty, Palaviduthi Village, Kadavur Taluk, Karur District. | 26/2024 |

| Date of | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension or appearance | Release on bail | Commencement of trail | Close of trail | Sentence or order |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 22.04.2021 21.00 Hrs | 23.04.2021 09.00 Hrs | 23.04.2021 | 01.05.2021 | 10.07.2024 | 18.07.2024 | 24.07.2024 |

| Explanation of delay |
|---|
| (15) |
| Nil |

Sd/-S.Pragatheesharan,
**Judicial Magistrate No.I,**
**Kulithalai.**

**Summary in CC. No. 262/2023**

| S. No | Description | Remarks | | |
|---|---|---|---|---|
| 1. | The period of the Remand of the Accused/ Surrender | Nil | | |
| 2. | Date of filing of the Complaint/Final Report in the Court | 10.08.2023 | | |
| 3. | The date of Commital of the Case to the Court of Sessions | Not Applicable | | |
| 4. | First Questioning u/s 240 of Crpc | 10.07.2024 | | |
| 5. | Filing of Miscellaneous petition and its result | Nil | | |
| 6. | Date of Examination in Chief and Cross examination of witness | Witness | Chief | Cross |
| | | Pw1 | 10.07.2024 | 10.07.2024 |
| | | Pw2 | 10.07.2024 | 10.07.2024 |
| | | Pw3 | 10.07.2024 | 10.07.2024 |
| | | Pw4 | 10.07.2024 | 10.07.2024 |
| | | Pw5 | 10.07.2024 | 10.07.2024 |
| | | Pw6 | 10.07.2024 | 10.07.2024 |
| | | Pw7 | 10.07.2024 | 10.07.2024 |
| | | Pw8 | 10.07.2024 | 10.07.2024 |
| | | Pw9 | 15.07.2024 | 15.07.2024 |
| 7. | NBW Issued date | Nil | | |
| 8. | NBW Recalled date | Nil | | |
| 9. | Questioning U/s 313 (1)(b) of Crpc | 18.07.2024 | | |
| 10. | Details of Abscondence of the Accused and his appearance/production | Nil | | |
| 11. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil | | |

Sd/-S.Pragatheeshwaran,
**Judicial Magistrate No.I,**
**Kulithalai.**